# போதை தடுப்பு விழிப்புணர்வு மாரத்தான் பெண்கள் பிரிவில் ஜலகை மாணவி அசத்தல்

ஆத்தூர், ஆக. 19–

போதை தடுப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டியில், பெண்கள் பிரிவில் சேலத்தை சேர்ந்த மாணவி முதலிடம் பிடித்தார்.

ஆத்தூர் ரோட்டரி மிட்டவுன் கிளப், தன்னார்வ அமைப்புகள் சார்பில், போதை தடுப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி, ராணிப்பேட்டையில் நேற்று நடந்தது. ஆண்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள் என, 3 பிரிவாக நடந்தது. இதில் தமிழகம் மட்டுமின்றி மஹாராஷ்டிரா, டில்லி உள்ளிட்ட பகுதியில் இருந்து, 1,050 பேர் பங்கேற்றனர்.

நெடுஞ்சாலைத்துறை பயணியர் மாளிகை முன், அ.தி.மு.க.,வை சேர்ந்த, ஆத்தூர் தொகுதி எம்.எல்.ஏ., ஜெயசங்கரன், ஆத்தூர் டி.எஸ்.பி., சதீஷ்குமார், கொடியசைத்து போட்டியை தொடங்கி வைத்தனர்.

போட்டியாளர்கள், கடைவீதி, பழையபேட்டை, புதுப்பேட்டை, காமராஜர் சாலை, ரயிலடி தெரு, காந்தி நகர், விநாயகபுரம், உடையார்பாளையம் வழியே, 7 கி.மீ., சென்று, மீண்டும் பயணியர் மாளிகையை அடைந்தனர்.

ஆண்கள் பிரிவில் மஹாராஷ்டிராவை சேர்ந்த பிரமோத்குமார், ஓசூர் கோவிந்தராஜ், மஹாராஷ்டிரா அனில், சேலம் ரஞ்சித்குமார்; பெண்கள் பிரிவில் சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தை சேர்ந்த கல்லூரி மாணவி லதா, காஞ்சிபுரம் வினிதா, திருச்சி கிருத்திகா, சேலம் மீனாட்சி ஆகியோர் முறையே, முதல், 4 இடங்களை பிடித்தனர். அவர்களுக்கு, 15,000, 10,000, 5,000, 3000 ரூபாய் வீதம் பரிசு வழங்கப்பட்டன.

மாற்றுத்திறனாளிகள் பிரிவில் மகேஸ்வரி, ஆத்தூர் சின்னதுரை, அரியலுார் வேளாண் அலுவலர் ஆதிகேசவன், விஜயகுமார் முறையே, முதல், 4 இடங்களை பிடித்தனர். அவர்களுக்கு தலா, 2,000 ரூபாய் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் ஆண்கள், பெண்கள் பிரிவில் ஆறுதல் பரிசாக தலா, 50 பேருக்கு சில்வர் தட்டு பரிசு வழங்கினர்.

விழாவில் நகர செயலர்களான, தி.மு.க., பாலசுப்ரமணியம், அ.தி.மு.க., மோகன், ரோட்டரி மிட்டவுன் கிளப் தலைவர் கிரிதாரி, செயலர் மூர்த்தி, பொருளாளர் சரவணன், இந்திய வாலிபால் அணி வீராங்கனை எழில்மதி, ரோட்டரி சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.